පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරුමැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

| தரம் |
| --- |
| 10 |

# மூன்றாம் தவணைப்பரீட்சை – 2023

பாடம் - 85 – மனைப்பொருளியல் - பகுதி I,II

பாடசாலையின் பெயர் :-.................................................

சுட்டிலக்கம் :-....................................................... நேரம் - 3மணி

**கவனிக்குக.**

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக**
- **இவ்வினாப்பத்திரத்திற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.**
- **வினா 1 தொடக்கம் 40 வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள i,ii,iii,iv விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள புள்ளியிடும் தாளில் ஒவ்வொரு வினாவுக்குமான நீங்கள் தெரிவு செய்த விடையை புள்ளியிடும் தாளில் (X) அடையாளமிடுக.**

1) தானியம் மற்றும் அவரையினங்களுக்குள் அடங்கும் உணவு வகைகளாவது,
1)நிலக்கடலை, குரக்கன் 2) கடலை, எள்ளு
3)சோளம், பயறு 4) எள்ளு, அரிசி

2) பீற்றா கரட்டின் அதிகளவு அடங்கியுள்ள உணவு வகை
1)விலங்குணவு 2)தானியங்கள்
3)எண்ணெய் அடங்கியுள்ள வித்து வகைகள் 4)பழங்கள்

3) உணவுக்கூம்பத்தில் நாளாந்தம் குறைவாக உள்ளெடுக்க வேண்டிய உணவுக்கூட்டம்
1)தானியம் மற்றும் தானிய உற்பத்திகள் 2)சீனி மற்றும் எண்ணெய் உணவுகள்
3)மரக்கறிகள் மற்றும் பழங்கள் 4)பால் மற்றும் பால் உற்பத்திகள்

4) மாபோசணைக்குரிய கூட்டம்
1)காபோவைதரேற்று, புரதம், கொழுப்பு 2)காபோவைதரேற்று, கொழுப்பு, கனியுப்பு
3)கனியுப்பு, விட்டமின், புரதம் 4)கொழுப்பு, விட்டமின், கனியுப்பு

5) காபோவைதரேற்றின் எளிமையான அலகு
1)மோல்ட்டோஸ் 2)குளுக்கோஸ் 3)சுக்ரோஸ் 4)பெக்டின்

6) டைசக்கரைட்டின் சூத்திரமாவது
1)$C_6H_{12}O_6$ 2)$C_6H_{10}O_5$ 3)$C_{12}H_{22}O_{11}$ 4)$C_{10}H_22O_{11}$

7) அத்தியவசிய அமினோ அமிலம் அடங்கிய கூட்டமாவது
1)லைசின் மற்றும் அல்பியுமின் 2)கிரியோனின் மற்றும் லியுசின்
3)கேசின் மற்றும் வலின் 4)ஹிஸ்டின் மற்றும் செரின்

8) புரதத்தின் மூலக்கூறாவது
1)காபன், ஐதரசன், ஒட்சிசன், நைதரசன் 2)ஐதரசன், சல்பர், மக்னீசியம், ஒட்சிசன்
3)காபன், மக்னீசியம், ஐதரசன், பொசுபரசு 4)அயடின், இரும்பு, ஐதரசன், ஒட்சிசன்

9) நீரில் கரையும் விட்டமின்
1)A மற்றும் B 2)D மற்றும் E 3)K மற்றும் A 4)B மற்றும் C

10) கொழுப்பு 10g மற்றும் புரதம் 5g காபோவைதரேற்று 6g தகனமடையும் போது உடலிற்கு கிடைக்கும் சக்தியின் அளவு

1)124 கிலோகலோரி 2)156 கிலோகலோரி
3)134 கிலோகலோரி 4)100 கிலோகலோரி

11) புரத கட்டமைப்பில் அடங்கியுள்ள நைதரசனின் சதவீதம்
1) 8% 2) 16% 3) 24% 4) 36%

12) பல்நிரம்பா கொழுப்பமில வகைகள் அடங்கும் கூட்டமாவது
1)லினோலெனிக் , அரக்கிடோனிக் 2)ஒலேயிக், லினோலெனிக்
3)மிஸ்டிக், அரக்கிடோனிக் 4)பியூத்ரிக், லினோலெனிக்

13) சைவ உணவு வேளையொன்றின் போது இரும்பை பெற்றுக்கொள்வதற்கு சேர்த்துக் கொள்ளவேண்டிய உணவு வகை
1)கீரை வகை மற்றும் மரக்கறி 2)உலர்ந்த பழங்கள் மற்றும் மரக்கறிகள்
3)அவரையினங்கள் மற்றும் உலர்ந்த பழங்கள் 4)பழங்கள் மற்றும் அவரையினங்கள்

14) விட்டமின் B6 இன் இரசாயன பெயர்
1)தயமின் 2)நயாசின் 3)பிரிடொக்சின் 4)போலிக்

15) நுண்கனியுப்புக்கள் அடங்கும் கூட்டம்
1)இரும்பு, கோபர், அயடின் 2)கல்சியம், சிலேனியம், மக்னீசியம்
3)பொற்றாசியம், சல்பர், குளோரைட் 4)நாகம், கொபர், சல்பர்

16) DNA தொகுப்பிற்கு உதவும் கனிப்பொருள்
1)சோடியம் 2)பொற்றாசியம் 3)மக்னிசியம் 4)கல்சியம்

17) கல்சியம் அடங்கியுள்ள உணவு மூலம்
1)பால், பழங்கள், வட்டக்காய் 2)பால், கீரைவகை, எள்ளு
3)எள்ளு, இறைச்சி, நிவிதி கீரை 4)உப்பு, தக்காளி, சிறிய மீன்

18) உடற்கட்டமைப்பினுள் நடைபெறும் ஒட்சியேற்ற செயற்பாட்டுக்காக ஒட்சியேற்ற நிரோதிகளாக செயற்படும் விட்டமின்களாவன,
1)விட்டமின் A, D மற்றும் E 2)விட்டமின் A, C மற்றும் E
3)விட்டமின் B, D மற்றும் C 4)விட்டமின் K,A மற்றும் B

19) ஹீம் இரும்பு அடங்கும் உணவுவகை
1)பேரீத்தம்பழம், முட்டை மஞ்சட்கரு 2)இறைச்சி, உலர்ந்த திராட்சை
3)ஈரல், மீன் 4)மீன், முட்டை

20) உணவு வேளைகளைத் திட்டமிடும்போது பிரதேச ரீதியாக இலகுவாக கிடைக்கும் உணவு வகைகளை உணவு வேளைகளினுள் சேர்த்துக்கொள்ளல் தொடர்பான சரியான கூற்று
1)அடிக்கடி உணவு வேளையொன்றினுள் சேர்த்துக் கொள்வதற்கு உகந்தது.
2)தினசரி உணவு வேளையொன்றிற்கு உகந்தவாறு சேர்த்துக்கொள்ளல் பொருத்தமானது.
3)தினசரி உணவு வேளையில் பிரதேச ரீதியான உணவுகளை சேர்த்துக்கொள்வதால் உணவின் பசித்தன்மை இல்லாமல் போகும்.
4)தினசரி உணவு வேளையொன்றில் பிரதேசரீதியான உணவுகளை சேர்ப்பதால் போசணைப்பிரச்சினை ஏற்படும்.

21) உணவு வேளைகளைத் திட்டமிடும் போது வழிகாட்டக்கூடிய மூலாதாரமல்லாதது
1)உணவுப்பட்டோலை 2)போசணை அட்டவணை
3)உணவுக்கூம்பகம் 4)சிபாரிசு செய்யப்பட்ட நாளாந்த போசணைத்தேவை அட்டவணை

22) குடும்பமொன்றின் பொது நோக்கமொன்றை அடைவதற்காக அக்குடும்பத்தினர்
1)தாய் அர்பணிப்புடன் செயற்படல் வேண்டும்.
2)தந்தை அர்ப்பணிப்புடன் செயற்படல் வேண்டும்.

3)மூத்த குடும்ப உறுப்பினர்கள் ஒன்றிணைந்து செயற்படல் வேண்டும்.
4)குடும்பத்திலிலுள்ள அனைத்து உறுப்பினர்களும் ஒன்றிணைந்து செயற்படுதல் வேண்டும்.

23) மனையொன்றை கட்டியெழுப்பும் போது கவனம் செலுத்த வேண்டிய பிரதான விடயம்
1)கட்டியெழுப்பும் வீட்டின் அளவை தீர்மானமெடுத்தல்.
2)நவீன தொழினுட்பங்களை பயன்படுத்தல்
3)பொருத்தமான நிலத்தை தெரிவு செய்தல்.
4)சுற்றியுள்ள சூழலில் உள்ள வீட்டுத்திட்டங்களைப் பின்பற்றுதல்.

24) பல்தொழிற்பாட்டு தளபாடங்கள், வரையறுக்கப்பட்ட இடவசதியைக் கொண்ட இடங்களுக்கான தளபாடங்கள் ஒழுங்கு முறையில் தரப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.
1)அடுக்குக்கட்டில், கண்ணாடியுடனான அலுமாரி
2)விளக்கு மற்றும் கண்ணாடியுடன் கூடிய அலுமாரி
3)அடுக்குக்கட்டில்,மடிக்கும் கதிரை
4)விளக்குடன் கூடிய கட்டில், மடிக்கும் கதிரை

25) தளத்திட்டம் வரைதல் தொடர்பான சில கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.
A- குறிப்பிட்ட அளவுகளுக்கு வரைதல்
B- வெவ்வேறு குறியீடுகளின் பயன்பாடு
C- நடைபாதை 4 அடி அகலமாக இருக்க வேண்டும்.
D-படுக்கையறை இன்னொரு படுக்கையறையுடன் திறக்காமல் இருத்தல்.
E- காற்றோட்டத்தை பெற்றுக் கொள்வதற்காக சுவர்களின் மொத்தப்பரப்பளவில் 1∴5 பங்கை காற்றோட்டத்திற்காக விடுதல்.

தளத்திட்டத்தை வரையும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்களாவது

1)A,BC 2)A,B,E 3)B,C,D 4)C,D,E

26) மேலைத்தேய உணவு பரிமாறல் முறைகளில் இலங்கையில் உணவு பரிமாறும் முறைக்கு பெருமளவில் ஒத்த முறை
1)ஜேர்மன் முறை 2)சுயபரிமாறல் முறை 3)அமெரிக்க முறை 4) பிரான்ஸிய முறை

27) பெரும்பாலான நுண்ணங்கிகளின் வளர்ச்சிக்கு சாதகமான PH பெறுமானம்
1) 7-14 2) 6.6-7.5 3) 7-1 4) 4-9

28) குருதிச்சோகையின் நோய் அறிகுறி
1.மெலிந்த உடல் 2)வரண்ட மற்றும் சுருக்கமுள்ள தோல்
3)வீக்கம் 4)வெளிறல்

29) அயடின் குறைப்பாட்டினால் கர்ப்பிணித்தாய்மார்களுக்கு ஏற்படக்கூடிய நிலைமை
1)உயரம் குறைதல் 2)அங்கவீன குறைப்பாட்டுடன் குழந்தைகள் பிறத்தல்
3)மலச்சிக்கல் ஏற்படல் 4)குள்ளமாதல்

30) மாலைக்கண் நோய் நோய் ஏற்படுவதில் தாக்கம் செலுத்துவது
1)விட்டமின் A 2) அயடின் 3)புரதம் மற்றும் காபோவைதரேற்று 4)கனிப்பொருள்

31) திறப்புக்களை மூடுவதற்கு பயன்படுத்தப்படும் தையல் நுட்பமுறை
1)பைண்டிங் 2)பைப்பிங் 3)தெறியும் துவாரமும் 4)இரேந்தை பிடித்தல்

32) துணையலங்காரப்பொருட்கள் தைக்கப்பயன்படும் கருவிகளாக அடையாளப்படுத்தமுடியாதது,
1)மின்னழுத்தி மற்றும் நூல் 2)தீதாள் மற்றும் கத்தரிக்கோல்
3)சுவடுவரைச்சில்லு மற்றும் அளவுமாணி 4)எம்ரோய்டர் கத்தரி மற்றும் தீதாள்

33) தையல் நுட்பமுறை அல்லாதது,
1)குவில்ட் முறை 2)நூலோடல்
3)சிப்பியோரத்தையல் 4)தட்டைப்பொருத்து

34) குழந்தை ஆடைக்குரிய விசேட இயல்பு
1)சிறிய பூக்கள் கொண்ட துணி 2)அணிவதற்கும் கழற்றுவதற்கும் இலகுவாயிருத்தல்
3)உறிஞ்சும் தன்மை கொண்டது 4)இள நிறத்திலான பருத்தித்துணி

35) பெண்பிள்ளைகளின் முதல்பாலியல்புகளின் அறிகுறியாவது
1)மார்பகங்கள் பருத்தல் 2)சூலகம் மற்றும் கருப்பை விருத்தி
3)இடுப்பு அகலமாதல் 4)யோனித்திரவம் வெளியேறல்

36) உலக சுகாதார ஸ்தாபனத்தின் கூற்றுப்படி கட்டிளமைப்பருவ வயதெல்லை
1)வயது 12-15 வருடங்கள் 2)வயது 14-19 வருடங்கள்
3)வயது 10-19 வருடங்கள் 4)வயது 10-24 வருடங்கள்

37) கட்டிளமைப்பருவத்தினுள் காணக்கூடிய துர்குணமாவது
1)பகல் கனவு காணுதல் 2)தாழ்வு மனப்பான்மை
3)வீரவணக்கம் 4)பாவனை செய்தல்

38) மனையிற்கு அலங்காரத்தையும் பயன்பாட்டையும் பெற்றுத்தரக்கூடிய துணையலங்காரப் பொருட்களைக் கொண்ட விடைத் தொகுதி
1)அலங்காரப்பொருட்கள் மற்றும் சுவர் கடிகாரம்
2)சுவர்அலங்காரங்கள் மற்றும் விளக்கு கடிகாரம்
3)தரைவிரிப்பு மற்றும் சுவர்அலங்காரங்கள்
4)சுவர் அலங்காரங்கள் மற்றும் விளக்கு உறைகள்

39) நபர் ஒருவரின் மனதில் எழக்கூடிய நேர் மற்றும் எதிர்மறையான உணர்வுகள்
1)மனப்பாங்கு 2)திறன் 3)அறிவு 4)பயன்பாடு

40) பௌதீக வளம் மட்டும் கொண்ட விடை
1)காலம், சமூகவசதிகள், இடவசதி 2)இடவசதி, நீர், மின்சாரம்
3)பணம், எரிபொருள், நீர் 4)சமூகவசதிகள், எரிபொருள், மின்சாரம்

(1 × 40 =புள்ளிகள்)

## பகுதி ii

**முதலாம் வினா உட்பட எவையேனும் 05 வினாக்களுக்கு விடை தருக.**

❖ பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

01) சுமந்த ஒரு ஆடை தொழிற்சாலையில் ஊழியர் மற்றும் நிலன்த்தி வீட்டிலிருந்து தையல் மற்றும் வீட்டுத்தோட்டம் செய்து சுயதொழில் ஒன்றையும் செய்கின்றாள். நிலான்த்தியின் மகளும் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றவுள்ளதுடன் முன்பள்ளிக்குச் செல்லும் மற்றும் நிலன்த்தியின் சகோதரி பிரியன்தியும் இவ்வீட்டில் வசிக்கின்றனர்.

I. இக்குடும்பத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் இரண்டு எழுதுக.
II. இக்குடும்பத்தில் காணக்கூடிய நல்ல குணஇயல்புகள் இரண்டைக் குறிப்பிடுக.
III. மனைத்தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதில் சகோதரியிடமிருந்து கிடைக்கக்கூடிய உதவிகள் இரண்டைக் குறிப்பிடுக.
IV. நிலான்த்திக்கு தோட்டத்தில் நடக்கூடிய பருப்புவகைகள் மற்றும் தானியங்கள் இரண்டை எழுதுக.
V. சுமந்த வேலைக்கு எடுத்துச் செல்வற்குரிய பகலுணவை தயார் செய்யும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் இரண்டு எழுதுக.
VI. நிலன்த்தி குழந்தை ஆடை தைக்கும் போது பயன்படுத்தும் அலங்காரத்தையல்கள் மற்றும் தையல்நுட்பமுறைகளை பெயரிடுக.
VII. மூத்த மகளிடம் காணக்கூடிய உள விருத்திகான அறிகுறிகள் இரண்டு எழுதுக.
VIII. குடும்ப உறுப்பினர்களின் போசணைத்தேவையை பூர்த்தி செய்வதற்காக தோட்டத்தில் விளைக்கக்கூடிய இரும்புச்சத்துள்ள காய்கறிகளை குறிப்பிடுக.
IX. இக்குடும்பத்தின் நான்கு மனிதவளங்களை குறிப்பிடுக.
X. வீட்டுச் செலவுகளை குறைப்பதற்காக நீரை பயன்படுத்தும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் இரண்டு எழுதுக.

02)

I. பல்வகைமையுடன் உணவு வேளைகளைத் திட்டமிடுவது தொடர்பாக சுருக்கமாக குறிப்பிடுக.

II. உணவு கூம்பகத்தின் படி பின்வரும் உணவுகளை நாளாந்தம் உணவுகளில் சேர்த்துக் கொள்ள வேண்டிய அளவுகளைக் குறிப்பிடுக.

a)தானியங்கள் b)பழங்கள் c)எண்ணெய் விதை வகைகள்

III. கட்டிளமைப்பருவ வயதுடைய உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்குமான உணவுப் பட்டோலை ஒன்றை தயாரிக்க..

03)

I. மனையொன்றை கட்டியெழுப்பும் போது முதன்மையாக கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் 3 ஐ முன்வைக்க.
II. மனையொன்றை கட்டியெழுப்பும் போது சுற்றுப்புறச்சூழல் கொண்டிருக்க வேண்டிய இயல்புகள் 3 ஐ முன்வைக்க.

III. மனையொன்றிற்கு இயற்கையான காற்றோட்டமும் வளியோட்டமும் கிடைப்பதால் கிடைக்கும் நன்மைகள் 4 ஐ குறிப்பிடுக.

04)

I.முன்கட்டிளமைப்பருவம், நடுத்தரகட்டிளமைப்பருவம் என்பவற்றின் வயது எல்லைகளைக் குறிப்பிடுக.

II.ஆண் பிள்ளையொன்றின் துணைப்பாலியல்புகள் 03 ஐ குறிப்பிடுக.

III.கட்டிளமைப்பருவ மனவெழுச்சி வெளிப்பாட்டின் இயல்புகள் 2 ஐ குறிப்பிட்டு கட்டிளமைப்பருவத்தில் ஏற்படக்கூடிய மனவெழுச்சி இயல்புகளை கட்டுப்படுத்துவதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை விளக்குக.

05)

I. துணையலங்காரப் பொருட்களை நிர்மாணித்தலில் முன்திட்டமிடலில் உள்ளடக்கப்படும் விடயங்கள் 3 ஐ எழுதுக.

II. திறந்த தட்டைப் பொருத்து தைக்கும் போது கடைபிடிக்கக்கூடிய படிமுறைகள் 3 ஐ எழுதுக.

III. குழந்தை ஆடையை வெட்டும் போது பின்பற்றப்படும் முதல் 4 படிமுறைகள் எழுதுக.

06)

I.விட்டமின் வகைப்பாட்டை அட்டவணைப்படுத்துக.

II.நார்ச்சத்துள்ள உணவுகளை உட்கொள்வதால் உடலுக்கு கிடைக்கும் நன்மைகள் 3 ஐ குறிப்பிடுக.

III.பின்வரும் அட்டவணையை பூரணப்படுத்துக.

| | கனிப்பொருள் | உணவுகள் | குறைப்பாட்டு நோய்கள் |
|---|---|---|---|
| A | சோடியம் | ...................................... | வாந்தி, வயிற்றோட்டம், உணவில் விருப்பமின்மை,தசைபிடிப்பு |
| B | .................... | சிவப்பு நிற இறைச்சி, ஈரல், கீரைவகைகள், உலர்திராட்சை | குருதிச்சோகை |
| C | பொற்றாசியம் | புத்தம் புதிய பழங்கள், மரக்கறிகள், இறைச்சி, மீன், பால் | ................................ |
| D | கல்சியம் | ...................................... | பல் மற்றும் என்புகளின் பலவீனம் |

07)

I.கர்ப்பிணிப்பருவத்தின் இரண்டாம் மூன்றாம் மாதங்களில் விசேட போசணைத்தேவைகள் நாளாந்த போசணைத்தேவைகளில் அதிகரிப்பை காட்டுகிறது. ஆத்தகைய போசணைகள் 3 ஐ குறிப்பிடுக.

II. பெண் இனப்பெருக்கத்தொகுதியினால் ஆற்றக்கூடிய தொழில்கள் ஒன்று வீதம் தருக.

1. சூலகம்
2. பலோப்பியன் குழாய்
3. கர்ப்பப்பை

III. ஆண் இனப்பெருக்கத்தொகுதியை வரைந்து பெயரிடுக.

ஆண்டிறுதிப்பரீட்சை – 2023
தமிழ் மொழியும இலக்கியமும்
தரம்- 10
விடைகள்

பகுதி – I

| | | | |
|---|---|---|---|
| 01. - 3 | 11 - 1 | 21 - 4 | 31 - 2 |
| 02 - 1 | 12 - 4 | 22 - 2 | 32 - 1 |
| 03 - 4 | 13 - 2 | 23 - 1 | 33 - 2 |
| 04 - 2 | 14 - 2 | 24 - 2 | 34 - 3 |
| 05 - 2 | 15 - 1 | 25 - 3 | 35 - 3 |
| 06 - 2 | 16 - 3 | 26 - 3 | 36 - 2 |
| 07 - 1 | 17 - 3 | 27 - 1 | 37 - 4 |
| 08 - 3 | 18 - 3 | 28 - 2 | 38 - 1 |
| 09 - 4 | 19 - 1 | 29 - 1 | 39 - 3 |
| 10 - 1 | 20 - 2 | 30 - 3 | 40 - 1 |

பகுதி – II

01.

1. கண்கள் + பின் + அழகு + ஆர்ந்து + களித்திட
2. பெருநாள் ஒன்று வந்தால் உங்களுக்கு இருப்பிடமில்லை
3. பொருத்தமான வாக்கியம்
4. எழுவாய் - நீங்கள், பயனிலை – பறிக்காதீர்கள்
5. எண் வழு - இரு கண்களும் சிவந்தன.
6. பொருத்தமான வாக்கியம்
7. 1. பூங்கொடி 2. கற்சிலை
8. இடம், காலம், நேரம்
   தலைப்பு, நன்றி, பதவி, ஒப்பம்
9. ஞ், ச், வ்
10. நன்னூலாம் கடல் - உருவக அணி

பகுதி – III

01.

1. அ. தெளிவாகத் தெரிகின்ற
   ஆ. தெள் + நீர்
2. அ. பாரதியார்
   ஆ. ஆராய்ந்து
3. அ. ஒரு மலை / பொதிகை மலை
   ஆ. நிலைபெற்று/ தவழ்ந்து
4. அ. சேர் பொன் இராமநாதன் துறை
   ஆ இலங்கை சட்டசபையில் இலங்கை பிரதிநிதித்துவத்திற்கு போட்டியிடுவதற்காக
5. அ. நகைச்சுவை உணர்வு
   ஆ. கதாசிரியர்/ அ.முத்துலிங்கம்
6. அ. குற்றாலக்குறவஞ்சி
   ஆ. உயர்வுநவிற்சியணி
7. அ. ஒருவகை மரம்
   ஆ. விவசாயத்தொழில்
8. அ. கோப உணர்ச்சி
   ஆ. கைகேயி
9. அ. கதாசிரியர்/ தியடோர் பாஸ்கரன்
   ஆ. பரிட்சயமின்மை
10. அ. நட்பை நீக்கிக்கொள்ள வேண்டும்
    ஆ. நட்பைத் தழுவிக்கொள்ள வேண்டும்


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
T
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න